**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 51/2022 (C/W OS. 268/2022)

பெயர் - வைத்தியநாதன் (DW1) (Chief Continuation)

த/பெ. /க.பெ.

தேதி -16.03.2026

**<u>சாட்சி இன்று நீதிமன்றம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1) எனது குடும்ப அட்டைஅசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ. 8 ஆகவும்,

2) எனது வாக்காளர் கணக்கெடுப்பு அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ. 9 ஆகவும்,

3) 2-ம் பிரதிவாதியின் சென்னை பள்ளிக் கல்வித்துறையால் வழங்கப்பட்ட பணி நியமன செயல் முறை உத்தரவு நகல் பி.வா.சா.ஆ.10 ஆகவும்,

4) மயிலாடுதுறை co operative Sugar mil எனக்கு வழங்கப்பட்ட பணி நியமன ஆணை நகல் (அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஆட்சேபணையுடன்) பி.வா.சா.ஆ. 11 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பி.வா.சா.ஆ. 7 முதல் 11 வரையிலான ஆவணங்களை நான் தாக்கல் செய்த OS. 268/2022 வழக்கில் தாக்ல செய்யவில்லை என்றால் சரிதான். OS. 51/2022 எதிர் வழக்குரையில் மேற்படி ஆவணங்கள் என்னிடம் உள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 7 சர்வே எண். இல்லை என்றால் பொதுவா பாஸ்போட்டில் குறிப்பிடபடுவதில்லை. என்னுடைய முகவரியை உறுதி செய்ய தாக்கல் செய்துள்ளேன். பாஸ்போட்டுக்கு நான் கொடுக்கும் முகவரியை தான் அவர்கள் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். ஆனால் அடையாள அட்டை கொடுக்கப்படவேண்டும். ரேஷன் கார்டு கொடுத்தேன். அதில் என்ன முகவரி இருந்ததோ அதை தான் குறிப்பிட்டுள்ளார்கள். பி.வா.சா.ஆ. 10, 11 நாங்கள் கொடுத்த முகவரியின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் பல்காலைகழகத்திற்கு நாங்கள் வழங்கிய முகவரியை அனுப்பி உள்ளார்கள். பி.வா.சா.ஆ. 8 முதல் 11 வரையிலான ஆவணங்கள் என் உரிமை மூலத்திற்கான ஆவணம் என்பது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 8 அட்டை வழங்கும் அலுவலரின் கையெழுத்து குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. அதில் என் தந்தை மாணிக்கம், தாய் மீனாட்சி சுந்தரம் மற்றும் மகன் வைத்தியநாதனுடன்

என் பெயர். 1993 முதல் 1998 வரையிலான குடும்ப அட்டை. அதில் நான் நுகர்வோராக ஒரு பொருள் கூட வாங்கியதாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். பொருட்களை வாங்குவதும் வாங்காமல் இருப்பதும் எங்கள் சுய விருப்பம். வேறு குடும்ப அட்டையை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 மாணிக்கம் என் தந்தை, மீனாட்சி சுந்தரம் என் தாயார், சுப்பிரமணியன் அண்ணன், மங்களம் அண்ணி மற்றும் என் பெயர் குறிப்பிடப்பட்டுளளது. என் தந்தையார் இறந்து பல ஆண்டுகள் ஆகிறது ஆண்டு நினைவில்லை. என் தந்தைக்கு முன்பே என் தாயார் இறந்துவிட்டார். அவர்களின் இறப்பு சான்றை தாக்கல் செய்ய இயலுமா என்றால் தேடி பார்க்க வேண்டும். மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யாததற்கு என்னவென்றால் தற்போது தான் தேடி கண்டுபிடித்தேன். வா.சா.ஆ. 9 தெரு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கதவு எண் மட்டும் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்து என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் என் உரிமைக்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் சொத்தை அபகரிக்க தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என் அண்ணி மங்களம் இருக்கிறார்.